முருகப்பெருமான் துணை

***இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்***

***இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்***

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு**

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 614**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

04.06.2021, வெள்ளிக்கிழமை

1. கலியுகத்தை ஞான யுகமாக்கி
கந்தவேலன் என்சக்தியாக வழிநடத்த
அழியாமை பெற்றுவந்த ஞானியே
ஆறுமுக அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர்யானும்
2. யானும் ஞானஅறிவுரை ஆசிதன்னை
உரைத்திடுவேன் பிலவ விடைதிங்கள் தன்னில்
ஞானதேசிகன் உன்கொள்கை வழி
ஞானயுகம் சடுதி அமையக் கூடும்
3. கூடாத எதிர்மறை சிக்கலெல்லாம்
குவலயத்தைவிட்டு உன்தர்மத்தால் அகன்றோடும்
நாடெங்கிலும் எந்தன் வழிபாடுபெருக
ஞானயுகமாற்றம் சடுதி காணும்
4. காணவே அரங்கன்உனை தொடர்ந்துஉலகோர்
கட்டாயம் சன்மார்க்கநெறி ஏற்று
ஞானவழி தொடர்ந்து வருகவருக
நம்பக நிலைபெருகி கலியுகத்தில்
5. கலியுகத்தில் பிரணவ சக்தியின் மூலம்
கட்டாயம் பெருமாற்றம் சடுதி காணும்
அழியாமை உலக மக்களெல்லாம்
அரங்கன் உன்வழி வருவதாலே சடுதிபெற்று
6. பெற்றுமே பேரிடரையும் வெல்லக்கூடிய
பிரம்ம சூட்சும மகாசக்தி அடைந்து
ஆற்றல்பட உலகை காக்கும்
அற்புதங்கள் பெற்று சிறக்கநேரும்
7. நேர்மைபட உன்தர்மம் கைக்கொண்டோ
நிலஉலகில் ஞானியாவர் என்பேன்
ஏற்புகொண்டு உன்வழி வருபவரெல்லாம்
இந்தஉலகத்தில் பாதுகாப்புப்பெற்று நிலைப்பர்என்பேன்
8. நிலைக்கவே நிலவுலகம் சடுதி
நிலைத்தன்மை கொண்டு தழைக்கவே
கலியுகத்தின் ஞானிஉன் அருள்பெற
கட்டாயம் உன்தர்மவழிகளை ஏற்கஉலகம் சடுதிமீட்புகாணும்

ஞானஅறிவுரை ஆசி முற்றே —சுபம்—

*ஐயன் வேலவன் அடியினைப் போற்றிட*
*வையகம் போற்ற வாழ்வார் நலமே!*
*பற்றறுத்த வேலவன் பதத்தை பற்றிட*
*நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!*
*ஆட்சிதான் மாற்றமும் அருளுவான் வேலனும்*
*மாட்சிமை மிக்க மக்கள் வாழவே!*

துறையூர் ஓங்காரக்குடில் மூலமாக ஆசான் முருகப்பெருமான் ஆசியால் 20 கோடி பேர்களுக்கு மேலாக தொடர்ந்து அன்னதானம் செய்து வருகிறோம். இனிவரும் காலங்களிலும் முருகப்பெருமான் துணையுடன் மேன்மேலும் சிறப்பாக அன்னதானம் செய்வோம்.

– ஆறுமுக அரங்கமகா தேசிகர்.